JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 45/2026 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | ஐயப்பன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது கீழப்புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம்செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் உடன்பிறந்த தம்பி. அசா.1 ரஞ்சிதா என் மனைவி. இந்த வழக்கை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.
அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 11.01.2026 ம் தேதியன்று 18.30 மணியளவில் ஆஜர் எதிரி அசா.1 ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல, அசா.1 க்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியுடன் அசா.1 சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 45/2026 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | ரஞ்சிதா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

**முதல் விசாரணை**

**நான் தற்போது கீழப்புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் கணவரின் உடன்பிறந்த தம்பி. நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் எனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. எதிரி என்னை அசிங்கமாக பேசவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு</u>

அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 11.01.2026 ம் தேதியன்று 18.30 மணியளவில் ஆஜர் எதிரி என்னை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல, எனக்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi